மக்கள் விரோதிகளுக்கு ஷாக் ; மக்களுக்கு சர்ப்ரைஸ்: இதுதான் ஸ்டாலின் ஸ்டைல்



► திருப்பத்தூரில் நடந்த திமுக வடக்கு மண்டல வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில், முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் பேசினார். அவரது பேச்சை கேட்க திரண்டு இருந்த நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், குழு உறுப்பினர்கள், டிஜிட்டல் முகவர்கள்.

திருப்பத்தூர் திமுக மாநாட்டில் முதல்வர் பரபரப்பு பேச்சு

திருப்பத்தூர், பிப். 15: திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மண்டலவாடி பகுதியில் திமுக வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் மாநாடு நேற்று நடந்தது. இதில் கலந்துகொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: பாஜவைச் சேர்ந்த ஒருத்தரை வச்சு உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்து தேர்தல் நெருக்கத்துல மக்கள் நலத் திட்டங்களை நிறுத்தணும்னு திட்டம் போட்டாங்க. அதாவது ஒன்றிய பாஜ அரசைப் பொறுத்தவரைக்கும் அவங்களுக்கு மக்களுக்கு நல்லது செய்ய மாட்டாங்க, நல்லது செய்யறவங்களையும் செய்ய விடமாட்டாங்க.

தமிழ்நாட்டு மகளிருக்காக நான் கொடுத்த உறுதிமொழிதான் உரிமைத் தொகை. அதுக்குத் தடை போட நான் விட்டுருவேனா? அதனாலதான் மக்களுக்கு சர்ப்ரைஸ் கொடுத்து மக்கள் விரோதிகளுக்கு ஷாக் கொடுத்தோம். இதுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய ஸ்டைல். ஓரவஞ்சனைக்கும் வஞ்சகத்துக்கும் ஒரு முகம் இருந்தா அதுதான் ஒன்றிய பாஜக அரசு. இதுவரைக்கும் தமிழ்நாட்டுக்குன்னு ஏதாவது ஒரு சிறப்புத் திட்டம் அறிவிச்சிருக்காங்களா? நான் திரும்பத் திரும்பக் கேட்டுக்கிட்டு இருக்கிறேன். முறையா பதில் சொல்ல இதுவரை பிரதமர் இல்ல உள்துறை அமைச்சர் வரவில்லை. அதுக்கு பதில் சொல்ல முடியல. அது இது தான், இது இதுதான்னு ஒதுக்கப்படுகிற விதிகளைச் சொல்லி ஏமாத்திக்கிட்டு இருக்காங்க.

பாஜ தலைமையிலிருந்தும் இதுக்கு பதில் வரல. பாஜகவின் கிளைச் செயலாளராக இருக்கிற பழனிசாமி இப்போ பாஜகவின் கிளைக் கழகம் ஆயிடுச்சு அது இப்போ. பாஜகவின் கிளைக் கழகச் செயலாளராக இருக்கக்கூடிய பழனிசாமி அவர்கள் கிட்ட ஏதாவது பதில் வந்துச்சா? தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் பேசுறதுக்கு துணிவில்லாம, முதுகெலும்பில்லாம, கொத்தடிமைகளாகச் செஞ்சிட்டு இருக்கக்கூடிய பழனிசாமி எனக்கு சவால் விட்டுருக்காரு. எந்த பழனிசாமி? இன்னைக்கும் ஒரு அரசியல்வாதி எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு அடையாளமா சோசியல் மீடியாவில வலம் வந்துட்டு இருக்கக்கூடிய அதுக்குச் சொந்தக்காரர்தான் பழனிசாமி.

பழனிசாமி அவர்களே.. தவழ்ந்து தவழ்ந்து ஊழல் குற்றவாளியான அம்மையார் சசிகலா கால்ல விழுந்து பதவியைப் பெற்று அவங்களை கால்வாரி விட்டுட்டு, நீ எனக்குப் பதவி கொடுத்தியான்னு மரியாதையில்லாம ஒருமையில் கேட்டீங்களே. இல்லன்னு மறுக்க முடியுமா? சட்டம் ஒழுங்கு பற்றிப் பேசுவதற்கு உங்களுக்குத் தார்மீக உரிமை இருக்கா? உங்க கட்சியினுடைய உண்மையான பொதுச் செயலாளராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய கோடநாடு பங்களாவில நடந்த கொலை, கொள்ளை, அதைத் தொடர்ந்து நடந்த மரணங்கள்.

இதையெல்லாம் மறக்கடிச்சிரலாம்னு நினைச்சுட்டு இருக்கீங்களா? பொல்லாத ஆட்சிதான் பழனிசாமியுடைய ஆட்சி என்பதற்குப் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமைகளே சாட்சியா ஆறாத வடுவா இருக்கே. ஸ்டெர்லைட் ஆலை வேண்டாம் என அமைதியாக ஊர்வலம் போன அப்பாவி பொதுமக்கள் மேல துப்பாக்கி சூடு நடத்த சொல்லிட்டு, டிவிய பாத்து தான் தெரிஞ்சுகிட்டேன்னு நாடகம் போட்டதை மக்கள் மறந்துட்டாங்கன்னு நினைக்கிறீங்களா?

சாத்தான்குளம் காவல் நிலையத்துல அப்பாவும் மகனும் அடித்துக் கொல்லப்பட்டப்போ, அவங்க உடல் நலமில்லாம இருந்ததாக கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாம சொன்னீங்களே, உங்களோட அந்த கல் மனசை மக்கள் மறந்துட்டாங்கன்னு நினைச்சீங்களா? ஊழலை ஊற்றுக்கண்ணாக அதிமுகவின் பாரம்பரியத்தை காப்பாற்ற, உறவினர்களுக்கு

> ■ ஓரவஞ்சனைக்கும் வஞ்சகத்துக்கும் ஒரு முகம் இருந்தா அதுதான் ஒன்றிய பாஜ அரசு. இதுவரைக்கும் தமிழ்நாட்டுக்குன்னு ஏதாவது ஒரு சிறப்புத் திட்டம் அறிவிச்சிருக்காங்களா?
>
> ■ பழனிசாமி அவர்களே.. தவழ்ந்து தவழ்ந்து ஊழல் குற்றவாளியான அம்மையார் சசிகலா கால்ல விழுந்து பதவியைப் பெற்று அவங்களை கால்வாரி விட்டுட்டு, நீ எனக்குப் பதவி கொடுத்தியான்னு மரியாதையில்லாம ஒருமையில் கேட்டீங்களே. இல்லன்னு மறுக்க முடியுமா?

டெண்டர்களை அள்ளி கொடுத்துட்டு, வழக்கு வந்த உடனே என்ன சொன்னாரு? தமிழ்நாடு முழுக்க சொந்தக்காரர்கள் இருக்காங்கன்னு சப்பைக் கட்டு கட்டுனீங்களே, மக்கள் மறந்துட்டாங்கன்னு நினைக்கிறீங்களா?

உங்க மேல ஊழல் வழக்கு இருக்கேன்னு கேட்டப்போ, யார் மேல தான் ஊழல் வழக்கு இல்லன்னு அசால்ட்டா பதில் சொன்ன உங்க டேலன்ட்டை என்னன்னு சொல்றது? உழவர்களுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை மனசாட்சி இல்லாம ஆதரிச்சு, போராடுற விவசாயிகள் மேலயே அவதூறு பரப்புனீங்களே. பச்சைத் துண்டு போட்டு பச்சை துரோகம் செஞ்ச பழனிசாமின்னு சொல்லி, உங்களை புறக்கணிச்ச விவசாயிகள் அதை மறந்திருப்பாங்கன்னு நினைச்சீங்களா?

சிறுபான்மை மக்களுக்கு எதிரான பாஜக வோட சட்டங்களை ஆதரிச்சதோடு, அந்த மக்களை அடக்குமுறைக்கு ஆளாக்குனீங்களே, அந்த காயம் ஆறிடுச்சுன்னு நினைக்கிறீங்களா? குட்கா வழக்குல அதிமுக அமைச்சர்கள் சிக்கினதுக்கு உங்கள் பதில் என்ன? வருமான வரித் துறையில சொந்தக்காரங்க சிக்கினதுனால பாஜகவோட கூட்டணி வைச்சீங்களா? இப்படி ஏராளமான கேள்விகள் இருக்கு. இதுக்கெல்லாம் நீங்க பதில் சொல்லாம தவிர்த்தாலும், மக்களுக்கு பதில் தெரியும், உங்கள் லட்சணமும் புரியும்.

எனவே திமுக அரசு அவதூறுகளாக களங்கப்படுத்த நினைக்கிற உங்க பேச்சுகளை மக்கள் நம்ப மாட்டாங்க. நம்ம திராவிட மாடல் அரசு சாதனைகளை அரசாக இருக்கிற காரணத்தினால பழனிசாமி அவர்கள் இவ்வளவு பதட்டத்தோடு புலம்புறதுக்கு காரணம் இதுதான். ஆயிரம் ஆண்டுகள் நின்று பேசுகிற சாதனைகளை அஞ்சே ஆண்டுகளில் செஞ்சு முடிச்சிருக்கிறோம். யூடியூப்பிலையும் சோசியல் மீடியாக்கள்லையும் பாருங்க. வட மாநில சேனல்கள் எல்லாம் எப்படி சாதனைகளை செய்யுறாங்க, இப்படி சாதனைகளை செய்யக்கூடிய அரசு இந்தியாவிலேயே இல்லன்னு நம்ம திராவிட மாடல் அரசை பாராட்டுறாங்க. இங்க இருக்குற ஒவ்வொருத்தரும் நெஞ்சை நிமிர்த்தி சொல்லலாம். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே நம்ம கவர்மெண்ட் மாதிரி சாதனைகள் செஞ்ச அரசே கிடையாது.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கு செஞ்ச திட்டங்களை மட்டும் இல்ல, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தொகுதிக்கும் நிறைவேற்றப்பட்டு இருக்கக்கூடிய சாதனைகளை நம்மால் பட்டியலிட்டு சொல்லிட முடியும்.

நல்லா புரிஞ்சுக்கோங்க, நாம போராடுறது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றிக்காக மட்டும் இல்ல. தமிழ்நாட்டோட வெற்றிக்காக, பாஜகவுடைய டப்பா இன்ஜின் முன்னாடி நம்முடைய திராவிட மாடல் சூப்பர் பாஸ்ட் இன்ஜின் ஒருபோதும் தலைகுனியாது. இந்த உறுதியை தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு வாக்காளருக்கும் ஏற்படுத்த வேண்டியது உங்களுடைய பணி. களப்பணி தான் உங்களுடைய முழு பணி. நீங்க உழைக்கிற ஒவ்வொரு நிமிடமும் ஒரு புது வாக்கு நமக்கு வரும். மக்களை சந்திக்கிறப்போ நம்முடைய சாதனைகளை சொன்னால் மட்டும் போதாது. ஒன்றிய பாஜக அரசோட துரோகங்களையும் வெளிச்சம் போட்டு காட்டணும். டப்பா இன்ஜின்ல ஏறி கொத்தடிமைகள் மூலமாக தமிழ்நாட்டுக்குள்ள புழக்கடை வழியாக நுழைய நினைக்கிற பாஜகவோட எண்ணத்தை தடுத்து நிறுத்தணும்.

தமிழ்நாட்டுக்கு பரப்புரைக்கு வர்ற பிரதமர், தமிழ்நாட்டுக்குன்னு இந்த சாதனைகள் எல்லாம் செஞ்சிருக்கிறோம்ன்னு சொன்னாரா? இருந்தா தானே சொல்ல முடியும்? அண்மையில ஒன்றிய அரசோட பட்ஜெட் வெளியிட்டாங்களே, அதுல தமிழ்நாட்டுக்குன்னு ஏதாவது சிறப்பு திட்டங்களை அறிவிச்சாங்களா? இதை தட்டிக் கேட்கிறதுணிச்சலோ தைரியமோ பழனிசாமி அவங்களுக்கு இருக்கா? அவரை பொறுத்தவரைக்கும் பொம்மைத் துப்பாக்கிக்காரன்னு சொன்னா ஸ்டாப் சொல்ற வரைக்கும் நான் ஸ்டாப்பா பல்டி அடிப்பார்.

எல்லா துரோகத்தையும் பண்ணிட்டு, கூட்டணி தர்மத்துக்காகத்தான் தமிழ்நாடு உரிமைகளை அடகு வெச்சேன்னு கொஞ்சம் கூட கூச்சமே இல்லாம சொல்லுவாங்க. இதையெல்லாம் நல்லா உணர்ந்துதான் அவருடைய தலைமையை, அவருடைய கூட்டணியை எதிர்க்கிறோம். எல்லாரும் ஒரிஜினல் ஓனரா பாஜக கிட்ட நேரடியாக சரண்டர் ஆகுறாங்க. எனவே அதிமுக என்பது பாஜக தேவைக்கேற்ப யூஸ் பண்ணிக்கிற ஒரு கிளை அமைப்பு என்பதை மக்கள் கிட்ட அம்பலப்படுத்தணும்.

தமிழ்நாடு என்ற பெயரையே மாத்தணும்னு துடிக்கிறவங்க தமிழ்நாட்டுக்குள்ள வந்தா, அவங்களுடைய சதித்திட்டங்கள் எப்படிப்பட்டதா இருக்கும்னு மக்களுக்கு நீங்கள் புரிய வைக்கணும். இந்த சதியை உணராம நம்மளோட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைத் தவிர வேறு யாருக்கு வாக்கு அளிச்சாலும், இன்னைக்கு நாம செஞ்சிட்டு இருக்கக்கூடிய அத்தனை நலத் திட்டங்களையும் நிறுத்தி டுவாங்கன்னு மக்களுக்கு நீங்கள் புரிய வைக்கணும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நடப்பு மாத சிறார் திரைப்படத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

சென்னை, பிப்.15: பள்ளிக் கல்வித் துறை சார்பில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்:

அரசுப் பள்ளிகளில் மாதந்தோறும் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திரைப்படம் திரையிடப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த மாதம் 'அயலி பாகம்-1' எனும் தமிழ் திரைப்படம் ஒளிபரப்பு செய்யப்பட்டது. தொடர்ந்து அதன் 2-ம் பாகம் பள்ளிகளில் நடப்பு மாதம் ஒளிபரப்பப்பட இருக்கிறது.

படத்தை ஒளிபரப்பு செய்வதற்கான இணைப்பு லிங்க் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்குரிய பாடவேளைகளில் படத்தை திரையிட வேண்டும். இந்த பணிகளை ஒருங்கிணைக்க பொறுப்பாசிரியர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் படத்தை பார்த்த பின் கதைச் சுருக்கத்தையும் படித்து மாணவர்களுக்கு பட பின்னணியை விளக்க வேண்டும்.

இது சார்ந்த வழிகாட்டுதல்களை பின் பற்றி படத்தை மாணவர்களுக்கு திரையிட்டு காண்பிக்க வேண்டும். மாநில அளவில் நடைபெறும் சிறார் திரைப்பட விழாவில் 25 சிறந்த மாணவர்கள் வெளி நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். இதற்கான அறிவுறுத்தல்களை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் வழங்க வேண்டும்.

தெற்கு இரயில்வே

தெற்கு இரயில்வே தலைமையக மருத்துவமனை,
பெரம்பூர், சென்னை – 600 023

விருப்ப வெளிப்பாடுகளை வரவேற்றல் (EOI)

மருத்துவ இயக்குநர், தெற்கு இரயில்வே தலைமையக மருத்துவமனை, பெரம்பூர், சென்னை – 600 023 அவர்கள், ரேடியோலாஜிக்கல் மற்றும் நியுரோலாஜிக்கல் பரிசோதனைகள் / நடைமுறைகள் மேற்கொள்வதற்கான பட்டியல் உருவாக்கத்திற்காக (Empanelment), இதில் பங்கேற்க விரும்பும் நிறுவனங்களிடமிருந்து உறையில் இடப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள், 09.03.2026 அன்று 15.00 மணி அல்லது அதற்கு முன்பாக மருத்துவ இயக்குநர், தெற்கு இரயில்வே தலைமையக மருத்துவமனை, பெரம்பூர், சென்னை – 600 023 அவர்கள் அலுவலகத்தில் வந்து சேருமாறு வரவேற்கிறார்.

1.	ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்	எண் : HQ/MD.34/I/R/P/CT & MRI தேதி : 05.12.2025
2.	EOI – ன் பெயர்	ரேடியோலாஜிக்கல் மற்றும் நியுரோலாஜிக்கல் பரிசோதனைகள் / நடைமுறைகள் (சிடி ஸ்கேன் மற்றும் எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் பிற தொடர்புடைய சேவைகள்)
3.	கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள்	கீழ்க்காணும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.
4.	பட்டியல் உருவாக்க காலம்	உடன்படிக்கையில் புகும் நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள்
5.	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படுவதற்கான தேதியும் நேரமும்	09–03–2026 அன்று 15.00 மணி வரை
6.	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதியும் நேரமும்	09–03–2026 அன்று 15.30 மணி
7.	இணையதள முகவரி	www.sr.indianrailway.gov.in

மருத்துவ இயக்குநர்,
தெற்கு இரயில்வே தலைமையக மருத்துவமனை, பெரம்பூர்.

தெற்கு இரயில்வே

சென்னை கோட்டத்தின் NSG – 4 வகை இரயில் நிலையத்திற்காக, வண்டலூர் (VDR) ல் பயணச்சீட்டு வழங்கும் முகவரை (STBA) நியமனம் செய்வதற்காக திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

பணி பற்றிய விவரம் மற்றும் அதன் அமைவிடம்	சென்னை கோட்டத்தின் NSG – 4 வகை இரயில் நிலையத்திற்காக வண்டலூர் (VDR)–ல் நிலைய பயணச்சீட்டு வழங்கும் முகவர் (STBA) நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்களை வரவேற்றல்
ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம்	ரூ 1,120/–
செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்பு தொகை	ரூ. 10,000/–
ஒப்பந்த காலம்	1 (ஓர்) ஆண்டு
நேரில் விவரங்களை பெறுவதற்கான அலுவலக முகவரி	முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர், என்ஜிஓ இணைப்பு, 2வது மாடி, பூங்கா நகர், தெற்கு இரயில்வே, சென்னை – 600 003
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படுவதற்கான தேதியும் நேரமும்	09–03–2026 அன்று 14.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படுதல்	09–03–2026 அன்று 14.30 மணி
இணையதள முகவரி	www.sr.indianrailways.gov.in

இந்த பணி நியமனம் முழுக்க முழுக்க ஒப்பந்த அடிப்படையிலானது. எனவே, இரயில்வே சேவைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுதல், சேவைப் பணியை முறைப்படுத்துதல், போனஸ், இரயில்வே பாஸ் வசதி ஆகிய எதுவும் பயணச் சீட்டுகளை வழங்கும் முகவர் (STBA)-க்கு கிடையாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

விண்ணப்பங்கள் பெறப்படும் தேதியும் விண்ணப்பங்கள் திறக்கப்படும் தேதியும் பின்னர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அவை அதற்கடுத்த வேலை நாளில் திறக்கப்படும்.

கோட்ட இரயில்வே மேலாளர், சென்னை கோட்டம், தெற்கு இரயில்வே

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும்

7.5 சதவீதம் சரி 92.5 சதவீதம்

தமிழகத்தில் நீட் நுழைய விட்ட துரோகி எடப்பாடி அல்லவா?

வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் பதிலடி

சென்னை, பிப்.15: 7.5 சதவீதம் சரி 92.5 சதவீதம் தமிழகத்தில் நீட் நுழைய விட்ட துரோகி எடப்பாடி அல்லவா என்று வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் பதிலளித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

கம்பராமாயணத்தை எழுதியது சேக்கிழார் என்று சொன்ன மூளை, பிடித்த புத்தகம் என ஒரு புத்தகத்தின் பெயரை சொல்ல முடியாத மூளை, 13 பேர் சுட்டுக்கொன்றதை டிவியில் பார்த்து மட்டுமே தெரிந்து கொண்ட மூளையில், 7.5% உதித்ததாம், "சத்துணவு திட்டம்" என்றால், காமராஜ் தந்த மதிய உணவை கூறக்கூடாதா? சத்துணவு திட்டத்தை வாரத்துக்கு ஐந்து முட்டையுடன் உண்மையான சத்தான உணவாக தந்த கலைஞர் பெயரை சொல்லக் கூடாதா?

மருத்துவத்தில் 7.5 சதவீத ஒதுக்கீடு வேண்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆர்ப்பாட்டம் நடத்திய போதே, எடப்பாடி "போராட்டம் வேண்டாம்" எனக்குள்ள அதிகாரத்தில் போட்டுக்கொள்ளப் போகிறேன் என எடப்பாடி அறிவிக்கவில்லையே ஏன்? உங்களுக்கு ஒன்றிய அரசு மற்றும் நீதிமன்ற ஆதரவின்றி அறிவிக்க முடியும் என்றால் 7.5 சதவீதத்துக்கு பதில் 69 சதவீதம் அறிவிக்கலாமே?.

7.5 சதவீதம் நாங்கள் தான் என்று எங்கும் கூறவில்லை. நாங்களும் கடுமையாக போராடிய பின்தான் 7.5% கிடைத்தது என்று தான் சொன்னார். ஜெயலலிதாவும், நீங்களும் சென்னைக்கு மெட்ரோ ரயில் நான் தான் கொண்டு வந்தேன் என பொய் சொன்னதைப் போல் நீட் 7.5 நாங்கள் தான் கொண்டு வந்தோம் என்று சொல்லவில்லை. எங்களுக்கு உள்ள பிரச்னை இந்த 7.5%க்கு அல்ல, 92.5 சதவீதம் தமிழ்நாட்டின் உள்ளே நீட் நுழைய அனுமதித்தது யார்?

மருத்துவத்தில் 7.5% ஒதுக்கியது மட்டுமே உங்கள் அரசு, 7.5 சதவீதத்தில் வந்தவர்களுக்கு படிப்பு செலவு, சாப்பாடு செலவு, தங்கும் விடுதி என அரசு செலவில் அமைத்ததுடன், அதை விரிவு செய்து இன்ஜினியரிங், அக்ரிகல்ச்சர், சட்டப்படிப்பு என நீட்டியது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியின் தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத சாதனை. இந்தியா முழுவதும் நீட் அமலில் இருந்த போதும், கலைஞர், ஜெயலலிதாவும் தமிழகத்திற்கு நீட் நுழைய விடாமல் தடுத்தார்கள். ஆனால் சிவப்பு கம்பளம் விரித்து 92.5 சதவீதத்தை உள்ளே நுழைய விட்டது அடிமை பழனிசாமி அரசு.

2019 மார்ச் 4ம் தேதி தலைமை செயலகத்தில் 39 பேர் குடும்பத்தினர்க்கு மட்டும் 78 லட்சத்தை மட்டும் வழங்கிவிட்டு, தேர்தல் ஆணையத் தடுப்பால் தரவில்லை என சொன்னாரே தவிர, அதற்குப்பின் 2021 வரை ஆட்சியில்

இருந்த எடப்பாடி 59 லட்சத்து 99 ஆயிரத்து 961 குடும்பத்தை ஏமாற்றிவிட்டு சென்றார்.

நம்மைப் போல் மாதாமாதம் அல்ல ஒருகோடியே முப்பது லட்சம் பேருக்கும் அல்ல. 60 லட்சம் என அறிவித்து அதையும் வெறும் 39 குடும்பத்திற்கு கொடுத்ததற்கு விளம்பரம் செலவு மட்டும் 1 கோடியே 71 லட்சம், இந்த லட்சணத்தில் விளம்பரம் செய்கிறார் என முதல்வர் மு.க.ஸ்டாலினை பற்றி பேசிட எடப்பாடிக்கு என்ன தகுதியுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வட கிழக்கு ரயில்வே

மின்–ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு
ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு எண்.N-235-62
TELE TENDER-01-2026

இந்திய குடியரசு தலைவர் சார்பாக வடகிழக்கு ரயில்வே கோரக்பூர் துணை தலைமை சிக்னல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியாளர் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வரையறைகளின்படி, போதுமான அனுபவம் உள்ள ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மின்–ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு எண்: N-235-62 TELE TENDER-01-2026, **பணியின் பெயர்:** யூனிஃபீல்ட் கம்யூனிகேஷன் பேக்போன் & VOIP அடிப்படையிலான கட்டுப்பாட்டு தொடர்புடைய LAN உடன் அமைப்பு LJN, BSB, IZN பிரிவுகளில் உள்ள பல்வேறு நிலையங்கள் மற்றும் & தலைமையகம் வடகிழக்கு கட்டுப்பாட்டு அறை ரயில்வே மற்றும் TCP–IP அடிப்படையிலான தீயணைப்பு அமைப்பு பிரிவு கட்டுப்பாட்டில் சோதனை அறை & தலைமையக கட்டுப்பாட்டு அறை. ஆகியவற்றின் உள்கட்டமைப்பிற்காக ஐபி–எம்பிஎல்எஸ் அடிப்படையிலான நெட்வொர்க்கை வழங்கல் மற்றும் கோரக்பூரில் உள்ள SIP அடிப்படையிலான IP பரிமாற்றத்திற்கான தொடர்புடைய LAN & OFC உள்கட்டமைப்புடன் கூடிய FXS மீடியா கேட்வேக்களை வழங்குதல். **ஒப்பந்தப்புள்ளி மதிப்பு:** ரூ. 71,99,98,327.89 (ரூபாய் எழுபத்தொரு கோடியே தொன்னூற்று ஒன்பது லட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து முந்நூற்று இருபத்து ஏழாயிரத்து மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும்), **ஏல பாதுகாப்பு:** ரூ.37,50,000/-, **சலுகை செல்லுபடியாவது:** 90 நாட்கள், **இடம், ஒப்பந்தப்புள்ளியின் தொடக்கம், முடிவு தேதி, நேரம்:** DSTE/Tele அலுவலகம், வடகிழக்கு ரயில்வே, கோரக்பூர், 02.04.2026 15:00 மணி, **முடிவுறும் காலம்:** 12 (பன்னிரண்டு) மாதங்கள், மின் ஒப்பந்தபுள்ளி தொடர்பான மூல அறிவிப்பில் ஏதேனும் மாற்றங்களுக்கான திருத்தம் இணையதளத்தில் உள்ளதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள், விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, தகுதி வரையறை, நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் வடகிழக்கு ரயில்வேயின் இணையதளமான http://www.ireps.gov.in இல் உள்ளன.

குறிப்பு: ஒப்பந்தபுள்ளிதாரர்கள்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏலப்புள்ளியுடன் பொருத்தமான அனைத்து இணைப்புகள்/ படிவங்கள்/ அனெக்ஸர்களை கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

துணை தலைமை சிக்னல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியாளர்
CPRO/Signal-104 **தலைமையகம், கோரக்பூர்**
ரயில்களில் பீடி/சிகரெட் புகைக்காதீர்கள்

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்)
(AN ISO 9001 - 2015 CERTIFIED COMPANY) தெற்கு சரகம்
எண்.1 ஆய்வாளர் குடியிருப்பு, த.சி.கா 6வது அணி வளாகம், புது நத்தம் சாலை, மதுரை-625 014
மின் அஞ்சல் : spndengrsc.tnphcl@tn.gov.in தொலைபேசி எண் : 0452 - 2903019

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 51 / 2025-2026 **நாள் : 12.02.2026**

வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (இலைசத்தில்) (2025-2026)
1) தூத்துக்குடி மாவட்டம் **ஸ்ரீவைகுண்டத்தில்** தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு கட்டடம் கட்டுதல்.	ரூ.208.75 + GST @ 18%
2) தேனி மாவட்டம் **மயிலாடும்பாறையில்** தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு கட்டடம் கட்டுதல்	ரூ.193.01+ GST @ 18%

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in அனுகவும்
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாளும் மற்றும் நேரமும் : **19.02.2026 நண்பகல் 12.00 மணி முதல் 28.02.2026 மாலை 06.00 மணி வரை**
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **02.03.2026 காலை 11.15 மணிக்கு**
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை www.tnphc.com & www.tnpolice.gov.in ஆகிய இணையதளங்களில் காணலாம்

செ.ம.தொ.இ / 1049 / ஒப்பந்தப்புள்ளி /2026 கண்காணிப்புப் பொறியாளர், தெற்கு சரகம் /த.நா.கா.வீ.வ.க

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194/ 98840 62068/ 99623 33307

[பிற்சேர்க்கை–IV–A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]

அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 30/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) இன்டஸ்இன்ட் பேங்க் லிமிடெட் (ஐபிஎல்) (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 11.01.2022 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின